செ.வெ.எண்:18 நாள்:21.05.2021

**நாமக்கல் மாவட்டம்**

**கொரோனா நோயாளிகளுக்கு கூடுதல் படுக்கை வசதி ஏற்படுத்தும் வகையில் இராசிபுரம் திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ். இ.ஆ.ப., அவர்கள் திறந்துவைத்து பார்வையிட்டார்.**

-----

கொரோனா நோயாளிகளுக்கு கூடுதல் படுக்கை வசதி ஏற்படுத்தும் வகையில் நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தை, நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஏ.கே.பி.சின்ராஜ் அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ். இ.ஆ.ப., அவர்கள் இன்று (21.05.2021) திறந்துவைத்து பார்வையிட்டார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,**

நாமக்கல் மாவட்டத்தில் கொரோனா நோய்த்தொற்று தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. கொரோனா நோய்த்தொற்று சங்கிலியை உடைப்பது மட்டுமே கொரோனா நோய்த்தொற்றை கட்டுப்படுத்தும் வழி என்பதால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முழு ஊரடங்கை அமல்படுத்த உத்தரவிட்டார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், தனியார் மருத்துவமனைகளில் தினசரி காலியாக உள்ள படுக்கைகளின் விவரங்கள், ஆக்ஸிஜன் இருப்பு மற்றும் தேவைகள் குறித்து கண்காணிக்க இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களாக உள்ள மருத்துவர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து, அந்த குழுவினர் மாவட்டங்களில் உள்ள விவரங்களை போர்க்கால அடிப்படையில் திரட்டி, கொரோனா நோய்த்தொற்று ஏற்படும் நோயாளிகளுக்கு உதவ விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளார்கள்.

மேலும், மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், தனியார் மருத்துவமனைகள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் செயல்பட்டு வரும் கொரோனா சிறப்பு சிகிச்சை மையங்களில் உள்ள வசதிகளின் விவரங்களை தினந்தோறும் 2, 3 முறை தகவல்களை உடனுக்குடன் திரட்டும் வகையில் மாவட்ட அளவிலான சிறப்பு நிர்வாக குழுவை ஏற்படுத்த உத்தரவிட்டுள்ளார்கள்.

இதனடிப்படையில் நாமக்கல் மாவட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில், மருத்துவ கல்லூரி பேராசிரியர்கள் உள்ளிட்ட 7 நபர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு, இந்த குழுவினர் படுக்கை வசதிகளின் விவரம், ஆக்ஸிஜன் இருப்பு, ஆக்ஸிஜன் தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை விவரங்களை தொகுத்து ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

அதன் அடிப்படையில், நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் திருவள்ளுவர் அரசினர் கலைக்கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தில் நோயாளிகளுக்கு ஆக்ஸிஜன் வழங்கும் வசதியுடன் கூடிய 40 படுக்கைகளும், 140 சாதாரண படுக்கைகளும் என மொத்தம் 180 படுக்கைகள் தயார் நிலையில் உள்ளது.

கொரோனா பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளுக்கு இளைஞர்கள் தங்கள் பங்களிப்பை அளிக்கும் வகையில் தங்கள் வீட்டில் உள்ள நபர்கள் அனைவரும் முகக்கவசம் அணிவதை உறுதி செய்வதுடன், எனது வீட்டில் ஒரு கொரோனா நோயாளிகூட உருவாக வாய்ப்பளிக்க மாட்டேன் என்று ஒவ்வொருவரும் உறுதி ஏற்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து இச்சிறப்பு சிகிச்சை மையத்திற்கு திரு.இராஜேஸ்குமார் மற்றும் அவரது குழுவினர் சார்பில் 239 போர்வைகளும், முத்தாயம்மாள் கல்வி நிறுவனங்கள் சார்பில் 100 கட்டில்கள், மெத்தைகள் மற்றும் தலையணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.கோட்டைக்குமார், இராசிபுரம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் மரு.ஜெயந்தி, இராசிபுரம் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் திரு.கே.பி.ஜெகநாதன் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.**